# Path to Dharma

## தர்மநெறி (Dharma Neri)

## 97





Thiruvembavi thiruvila 2015- December at Nallur Sivan Temple, Jaffna, SriLanka

Sri SankarPublications
KshethraVinayakaTemple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.
ஷேத்திர (வயல்) விநாயகஆலயம், ஸ்ரீமுன்னேஸ்வரம்,சிலாபம், ஸ்ரீலங்கா

Author - B.S.Sarma

January 2016 ஜனவரி (மார்கழி/ தை)





**Thiruvembavi thiruvila December-2015 at Nallur Sivan Temple, Jaffna, SriLanka**

Editorial.


The monthly publication 'Path to Darma', by KshethraVinayakaTemple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 97th number this month.

The main imperative endeavor of this monthly magazine is to pass on the vision associated to Hindu dharma basically by replies to the issues p... forward by the anxious readers.

The comments and analysis of the readers are appreciated.

B.S.ivaramakrishnaSarma,

KshethraVinayakaTemple, SriMunneswaram, Chilaw, Sri Lanka. .January, 2015



## Quatations

"He has one tusk and four arms.Two of His hands hold a noose and a hook,while the other hands show the gestures of removing fear and granting boons. A mouse is seen on His flag.Red,obese.He has ears like winnowing baskets".
-Ganapati Upanishad

"the controller of all, the Loard, the Ruler of all" -Mandukya Upanishad VI

"Having well ascertained the Self, the goal of the Vedantic knowledge, and having purified their minds through the practice of sannyasa, the seers, never relaxing their efforts, enjoy here supreme Immortality and at the time of the great end attain complete freedom in Brahmin" -Mundaka Upanishad III.ii.6

"Know thyself and give up all other vain words" - Mundaka Upanishad II.ii.5

"everywhere are His eyes, everywhere is His mouth, everywhere are His arms, everywhere His feet"
-Svetasvatara Upanishad III.16

His form is not an object of vision; no one beholds Him with the eyes. They who, through pure intellect and the Knowledge of Unity based upon reflection, realize Him as abiding in the heart becomes immortal.
-Svetasvatara Upanishad IV.20

"under the mighty rule of this Immutable, the sun and the moon are held in their respective positions; under the mighty rule of this Immutable, heaven and earth maintain their positions; moments, days and nights, fortnights, months, seasons and years are held in their positions" -Brihadaranyka Upanishad III.viii.9

" Of him who is without desires, who is free from desires, the object of whose desires are but the Self-the life breath does not depart. Being Brahman, he merges in Brahman"

- Brihadaranyaka Upanishad IV.iv.6

He who is the controller of all, the Lord of all, The Ruler of all, lies in this space within the heart…He is the separating boundary to keep these worlds apart. It is him the Brahmins seek to know by reciting the Veda, by the sacrifice, by giving, by austerity and fasting. Having known him one becomes a silent ascetic; desiring him as their world the itinerant ascetics wander about. Those who knew this in the past did not want offspring. 'What will we do with offspring?' they said, 'We who possess this Self, this world! 'So having given up desires for sons, for wealth and for worlds (of enjoyment) they follow the life of a mendicant.

-Brhadaranyaka Upanishd -4.4. 22

"As the spider emits its web, as small sparks shower from fire even so from this Self come from forth all breaths ,all worlds, all gods, all beings". -Brhadaranyaka Upanishd - 2. 1. 20

"As a man embraced deeply by a dear wife knows nothing outside or within ,even so the person embraced deeply by the wise self knows nothing oyeside or within". -Brhadaranyaka Upanishd - 4. 3. 21

From untruth/unreal (*asat)* lead me to the truth/real (*sat*),from the darkness lead me to the light, from death lead me to immortality -Brhadaranyaka Upanishd - 1. 3. 28

As a man when in the embrace of the women he loves knows nothing of the outside or inside,so does the person know nothing of the outside or inside when in the embrace of the intelligent self(atman which is Brahman)

-Brhadaranyaka Upanishd - 4. 3. 21

"You cannot see the Seer of seeing; you cannot hear the Hearer of hearing; you cannot think of the Thinker of thinking; you cannot know thw Knower of knowing. This is your Self that is within all; everything else but this is perishable"

-Brihadaranyka Upanishad III.iv.2

The Self which is free from sin, free from old age, free from death, free from grief, free from hunger, free from thirst, whose desires come true, and whose thoughts come true-That is which should be searched out, That it is which one should desire to understand. He who has known this Self and understood It obtains all the worlds and all desires"

-Chhandogya Upanishad VIII.vii.3

"Just as everything made of clay is known from but one lump of clay-tha change (of shape of the clay) being only designation based on speech while the truth is that it is really clay"

-Chandogya Upanishd - 6. 1. 3f

"He (Atman) is myself within the heart, smaller than a grain of rice or a barley corn,or a grain of millet:this is myself within my heart,greater than the earth,greater than the atmosphere,greater than the sky,greater than all these worlds".

-Chandogya Upanishad.111,14:3-5

"When all the desires that dwell in the heart fall away,then the mortal becomes immortal and here attains Brahman"

-Katha Upanishad II.iii.14

"The knowing Self is not born; It does not die. It has not sprung from anything; nothing has sprung from It. Birth less, eternal, everlasting, and ancient, It is not killed when the body is killed"

-Katha Upanishad I.ii.18

# இந்து சமயம் காட்டும் ஆன்மீக வாழ்வு

**வாழ் நாள் பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர்**
(யாழ்ப்பாண பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம், இலங்கை)

நீங்கள் முதலில் கேட்கவேண்டியது இந்த ஆன்மாவைப் பற்றிய உண்மை. நீங்கள் கேட்டிருந்தால் அதைப்பற்றிச் சிந்தியுங்கள். பிறகு அதைப்பற்றித் தியானம் செய்யுங்கள். வீண்வாதங்கள் இனி வேண்டாம், நீங்கள் எல்லையற்ற ஆன்மாதானா என்று உங்களைத் திருப்திசெய்து கொள்ளுங்கள். அது உண்மையானால் நீங்கள் உடல் என்று நினைப்பது பொய். நீங்கள் ஆன்மா, அதை உணர வேண்டும். ஆன்மா தன்னை ஆன்மாவாகப் பார்க்க வேண்டும். இப்பொழுதோ ஆன்மா தன்னை உடலாகப் பார்க்கிறது. அது நிற்க வேண்டும். இந்த உணர்வு வந்தவுடனேயே உங்களுக்கு முத்தி கிடைத்து விட்டது.

ஆன்மீக வாழ்வு பற்றி சுவாமி விவேகானந்தர் கூறிய அனுபவ வார்த்தைகளே இவை. மனிதர்களாகிய எமது வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? இந்த உலகந்தானா வாழ்க்கையின் குறிக்கோள்? மனிதன் அனுபவித்துக் கொண்டிருக்கும் தொல்லைக்குமேல் வேறு ஒன்றும் கிடையாதா? அன்றி தொல்லை நீங்கி இன்பமாக இருப்பது தான் வாழ்க்கையின் குறிக்கோளா? பிறப்பு என்பது என்ன? பிறவியின் நோக்கம் யாது? பிறப்பெடுத்து மனிதர்களாக வாழும் நாம் வாழ்க்கையில் காண்பவையும், அனுபவிப்பவையும் நிலையற்றவை*f* அநித்தியமானவை*f* இவற்றையெல்லாம் விஞ்சி நிற்கும் மெய்ப்பொருள் உண்டா? இறப்பு என்பது என்ன? என்பன போன்ற ப ல ஐயங்கள் மனிதனது வாழ்க்கையில் காலத்துக்குக் காலம் எழுந்துள்ளன. காலத்துக்காலம் தோன்றிய ஞானிகளும் அனுபூதிமான்களும் தத்துவ சிந்தனையாளர்களும் இத்தகைய சந்தேகங்களுக்கு விடை கண்டு விளக்கமளித்துள்ளனர். இத்தகைய வினாக்களுக்குரிய தெளிவான விடைகளே மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கு உரமூட்டுபவையாக அமைவன. உலகத்து மக்கள் யாக்கையைப் பெற்றோர். அந்த யாக்கையை பெற்றதனாலாகிய பயனைப் பெற முந்துதல் வேண்டும். வாழ்வாங்கு வாழ வேண்டும். வாழும் வகையறிந்து வாழவேண்டும் எனச் சமய நூல்கள் இயம்புகின்றன.

இந்து சமய திருநூல்களிலேயே இத்தகைய ஆன்மீக விடயங்கள் மிக விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மனிதனது ஆன்மீக விடயங்கள் பற்றிப் பொருள் கொள்வதிலோ அத்தத்துவங்களுக்கு விளக்கம் காண்பதிலோ ஞானியர்களிடையே வேறுபாடு இருக்கலாம். எனினும், இவை யாவற்றுக்கும் அடிப்படையாக சமயத் திரு நூல்கள் விளங்குகின்றன. புனிதம் நிறைந்த அழிவற்ற வேதனங்கள் எமது வாழ்க்கையின் உயர் இலட்சித்திறன் அம்சங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கும் தோற்றுவாயாக உள்ளன.

மனிதன் தூல சரீரத்தில் மாத்திரம் அடங்கியிருப்பவன் அல்லன். அவனுடைய இச்சரீரத்தினுள் சூட்சுமமான மனது உள்ளதென்றும் அதற்கும் மேலாக அதனை இயக்கும் ஒரு பொருள் உண்டு என்றும் நாம் நம்புகின்றோம். இதனையே ஆத்மா என்பர். இது மாறுபாடு இல்லாதது. ஆதியும் அந்தமும் அற்றது. மரணமில்லாத பெருவாழ்வில் அவ்வாத்ம சொரூபம் உள்ளது. இவ்வாத்மா பற்றி இந்துக்களிடையே நிலவும் கொள்கை கவனத்திற்குரியது. அது இவ்வாத்மா பல சரீரங்களை எடுத்துச் சரீரத்திலுள்ள விருப்புத் தீரும் வரை அதில் தங்கியிருந்து விருப்புத் தீர்ந்தவுடன் விடுதலைப்பேறு அடைகின்றது என்ற கொள்கையாகும். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி பல்வேறு கொள்கைகள் இந்துக்களிடையே காணப்படுகின்றன. இவை இரண்டும் என்றைக்குமே வெவ்வேறு பொருள்கள் என்பது ஒரு பிரிவினரின் கொள்கை. பிரிதோர் பிரிவினர், பரமாத்மாவே ஜீவாத்மாவாக உள்ளதென்றும் உள்ளது. பரமாத்மாவாகிய ஒரு பொருள் தான் என்றும் கூறுவர். இவ்வாறு பல கொள்கை வேறுபாடுகள் காணப்படுமிடத்தும், ஆத்மா எல்லையிலடங்காதது. பிறப்பும் இறப்பும் அற்றது*f* பல சரீரங்களை எடுத்து இறுதியில் மனித சரீரத்திலிருந்து பூரணத்துவமாகிய விடுதலையை அடைகின்றது என்ற அடிப்படைக் கொள்கையில் இந்துக்கள் உறுதியாக உள்ளனர்.

எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதிலும் அரிது என்ற வாக்கின்படி பிறப்பில் உயர்ந்தது மனிதப் பிறவியாகும் என்பது பெறப்படுகின்றது. இப்பிறவியின் நோக்கத்தைச் சரிவர அறிந்து அதற்கேற்ப வாழ்பவனே நிறை மனிதனாக விளங்குவான். மனிதன் நிறைமனிதனாக வாழ்வுக்கேற்ற வழிமுறைகளை ஞானிகள் எடுத்துக் கூறியுள்ளனர். மனித வடிவத்தில் பிறப்பெடுத்திருந்தால் மட்டும் போதாது மனிதனாகப் பிறந்தவனிடத்திலே மனிதத் தன்மை பொருந்தியிருந்தல் வேண்டும்.

மனித வடிவில் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது. எவ்வெவ் வகைகளில் மனிதன் தன்னை மேலோனாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வகையில் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றவனே ஆத்மீக சாதனையிலும் வெற்றிபெறக்கூடியவனாவான். ஆத்மீக நிலைக்கு உயர்ந்துவரும் உயிர் மானிடவடிவத்தை எட்டுகின்றது என்பது அறிஞர் கருத்தாகும். மனிதன் பெற்றுள்ள உடம்பு நிறை வாழ்வு பெற உதவியாகவுள்ளது. மனிதன் தனது மனதைப் பெருநிலை எய்தத் தகுதியுடையதாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மேலும் வழிவகுப்பது மனிதனுடைய ஒழுக்கமாகும்.

நெறியான வாழ்க்கைக்கும் ஒழுக்கமுடைமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனிதன் ஏன் ஒழுக்கமுடையவனாக இருக்க வேண்டும்? தனது உள்ளத்தில் எழும் சிந்தனைகளுக்கேற்ப எப்படியும் நடந்து கொள்ளலாமே என எண்ணத் தூண்டுவது இயல்பே. இந்துக்களின் ஆத்மீக வாழ்வைப் பொறுத்தவரை ஒழுக்கம் சமய வாழ்வுக்குப் பக்கபலமாக அமைகின்றது. மனித மனம் தனக்குத்தானே உருவாக்கிக்கொண்ட செயல்களையே சிந்தனை என்கின்றோம். சில சிந்தனைகள் ஒழுக்கங்களைத் தனதாக்கிக் கொள்ளும் போது அது ஞானமாக நிறைவு பெறுகின்றது.

வாழ்வின் வளர்ச்சி, நீடித்த மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு மாத்திரமன்றி ஆன்மீக வாழ்வுக்கும் ஞானம் வழி செய்கின்றது. இக்காரணத்தினால் தான் இந்து சமயத் திருநூல்கள் ஞானத்திற்குச் சிறப்பிடம் வழங்கியுள்ளன. உபநிடதங்கள் ஞானத்தையே பிரதான பொருளாகக் கொண்டுள்ளன. பகவத் கீதை ஞானயோகமாக உபதேசிக்கின்றது. ஆகமங்கள் ஞானபாதமெனச் சிறப்பிக்கின்றன. ஞானநிலையில் ஒருவன் கடவுள் திருவுளத்துக்கு ஒப்ப ஒழுக வேண்டும் என்பதை மனிதன் உணரத் தவறுவதில்லை. ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கையின் வாயிலாக மனிதன் தனது விழுப்பத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வள்ளுவர்,

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

என்று வலியுறுத்திக் கூறுவது குறிப்பிடத்தக்கது. மலரானது தன்னிடத்தேயுள்ள அழகையும், நறுமணத்தையும் இயல்பாகவே வெளிப்படுத்துதல் போல மனிதனும் தன்னிடத்தேயுள்ள புனிதத்தன்மையையும் பேரன்பையும் பண்பையும் புலப்படுத்தக் கடமைப்பட்டுள்ளான் எனவும் அதற்காகவே மானிடப் பிறவி ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் கொள்வதில் தவறில்லை. தனது மேலான இயல்பைத் தோற்றுவிப்பதற்கு ஒழுக்கம் ஒன்றே அவனுக்குரிய வழி என்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதனுக்கு ஒழுக்கம் விழுப்பம் தரும் காரணத்தால் ஒழுக்கம் மனிதனால் உயிரினும் ஓம்பப்படும் எனக் குறள் அறிவுறுத்துகின்றது. ஒழுக்கமானது நாளடைவில் மனிதனைத் தெய்வ சந்நிதியில் கொண்டு சேர்த்துவிடுகிறது.

மக்களது சிந்தனையின் தன்மைக்கேற்ப வாழ்க்கையின் நோக்கங்களும் வேறுபடுகின்றன. ஒரு சிலர் உலகியல் வாழ்க்கையில் இன்பமுற்று இருப்பதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கருதுவர். மனித வாழ்க்கையின் நோக்கம் பலவிதமான அனுபவங்களைப் பெறுவதும் அதற்குண்டான வழிகளைத் தேடுவதுமே எனச் சிலர் கருதுவர். அனுபவத்தைப் பெறத் துடிக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் ஓர் அளவுகோலை வைத்திருக்கின்றான். இந்த அளவுகோல் தரும் விமர்சனங்களே நல்லன - தீயன என்றும், உயர்ந்தவை - தாழ்ந்தவை என்றும் விருப்பு - வெறுப்பு என்றும் கொள்ளத்தக்கவை - தள்ளத்தக்கவை என்றும் பல்வேறு மனோ விகாரங்களாகவும் அதன் அடிப்படையில் செயல்களாகவும் தோன்றுகின்றன. வாழ்க்கையின் நோக்கங்கள் மனிதர்க்கு மனிதர் வேறுபடுவதற்கு இதுவே அடிப்படையாகும்.

அனுபவத்தைத் தேடிப்பிடிப்பதிலும் அதற்குரிய பொருளை நாடுவதில் இந்த அளவுகோல்கள் தனித்தன்மை பெற்றிருப்பினும் அடிப்படையில் இதனிடத்தில் ஒரு பொதுமைக் குணம் காணக்கிடைக் கின்றது. மனிதன் தெளிவைத் தேடவேண்டிய தேவையும் இங்குதான் தோன்றுகின்றது. எல்லோரிடத்திலும் மாறாமல் காணப்படும் இந்தப் பொதுமைக் குணத்தை ஒருவன் தனது வாழ்விலே கண்டறிய முயல வேண்டும்.

ஞானத்தின் நோக்கம் வாழ்வின் அடிப்படை இலட்சியத்தையும் அதனை அடைவதற்கான வழிகளையும் சுட்டிக் காண்பிப்பதாக அமைய வேண்டும். இந்நிலையில் செயல்படத் தொடங்கிய ஒவ்வொரு முயற்சியும் சமயம் என்ற பெயர் பெறுகின்றது. மனிதன் பெற விரும்பும் மனோநிலைதான் என்ன என்ற வினாவுக்கு ஏற்பட்ட விடைகளே ஆன்மீகம் என்றும் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு தனிமனிதனின் வளர்ச்சி அவன் அனுபவிக்கும் அமைதியைப் பொறுத்தது என அறிஞர் கருதுவர். அமைதி கூடும்பொழுது வாழ்வின் நிலை கூடுகின்றது. ஞானத்தின் இயல்பு மோனத்தின் எல்லையைக் காட்டுவதாய் அமையும. இந்த அமைதியின் தன்மையைப் பற்றி ஆராய்வதே சமயத்தின் முக்கயி பணியாக அமைந்தது. வேதங்களும் உபநிடதங்களும் கீதையும் வேறு பல ஞான நூல்களும் இது பற்றி விளக்கிக் கூறுகின்றன. இந்த அமைதிக்கு உரிய மறுபெயரே ஆத்மா என்பதாகும். இதனைப் பற்றிய தெளிவான ஞானமே ஆத்மஞானம் எனப்படும். எது சாந்த வடிவாகவும் தன் சுய அமைதியைத் தானே உணரும் அறிவு ரூபமாகவும் இருக்கிறதோ அதுதான் ஒவ்வொரு மனிதனின் இயல்பான, என்றுமுள்ள பிறப்பு இறப்பு அற்ற சுயநிலை என ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர். இந்தச்சுயநிலை தற்காலிகமாக மறைக்கப்பட்டு அது எட்டாத ஒரு பொருள் போன்றும் அதை அடைய ஆயிரமாயிரம் முயற்சிகள் தேவை என்பது போன்றும் மனதுக்குத் தோன்றுகின்றது. இந்த நிலையில் மனிதனுக்கு 'ஜீவன்'' என்ற பெயர் கிடைக்கின்றது.

இந்த ஜீவனே ஆத்மஞானத்திற்கு உரியவனாவான். தனக்கும் தான் விரும்பும் அமைதிக்கும் இடைவெளி இல்லை என உணர்த்துவதே ஞானமாகும். இதற்காக மனிதன் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் ஞானமார்க்கமும் சாதனை, ஆன்மீக வளர்ச்சி, தவம் போன்ற பல பெயர்களால் குறிக்கப்படுகின்றது. எனவே, ஆத்மீக சாதனைகள் பற்றி மனிதன் தனது வாழ்க்கையில் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டவனாகின்றான். ஆத்மீக சாதனைகளுக்குத் தடையாக அமைவது அறியாமையே ஆகும். இந்த அறியாமையைத் திருத்துவதற்கான முயற்சிகளுக்கே பக்தி, தியானம், யோகம் ஆகிய பெயர்கள் தரப்பட்டுள்ளன. அறியாமையை நீக்குவதற்குரிய மற்றொரு மாற்று மருந்து ஒழுக்கங்கள் ஆகும். ஆத்ம சாதனை உள்ளத்தைப் பற்றிய தெளிவை நிச்சயப்படுத்தும் முயற்சியாகவே அமைகின்றது.

மனிதனைப் பொறுத்தவரை மரணம் நிகழ்ந்தே தீரும். அதனைத் தவிர்க்க முடியாது எமக்கு முன் வாழ்ந்த எத்தனையோ பெரிய மகான்களும் இறந்துள்ளனர். சாதாரண எளிய மக்களும் இறந்துள்ளனர் ஒரு வகையில் இந்த உலகம் எல்லையற்ற இறந்த காலத்தின் இருப்பிடமாக உள்ளது போலத் தோன்றுகின்றது. அவ்வாறிருந்தும் நாம் இந்த உடலுடன் ஒட்டிக் கொள்கிறோம். 'நான் என்றும் இறக்க மாட்டேன்'' என்ற நினைப்பில் பல காரியங்களை செய்கின்றோம். உடல் இறந்துதான் ஆக வேண்டுமென்று தெரிந்துங்கூட நாம் அதனையே பெரிதாகக் கருதி ஒட்டிக் கொள்வதோடு உடல்தான் நாம் என நினைக்கின்றோம். எமது உடலை ஆத்ம சாதனைக்குரிய பொருளாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது அனுபூதமான்களின் கருத்தாகும்.

இருக்குவேதம் தரும் ஆன்மீகக் கருத்துக்களை நாம் ஆராயுமிடத்து அவ்வேதம் இறப்புப் பற்றியும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வு பற்றியும் விளக்கும் பல கருத்துள்ள பாடல்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வரும் இருக்குவேதத்தில் பத்தாம் மண்டலத்தில் வரும் நாசதீய சூத்திரத்தில் (ஓ-129) இறப்பு நிகழ்ந்ததா? என்ற கேள்வி எழுதப்படுகின்றது. இறப்புக்குப்பின் ஆன்மா வேறோர் உலகத்தில் பிறப்பதாக நம்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பிராமணங்களில் வரும்பகுதியில் மறுபிறப்புப் பற்றிய குறிப்பு உள்ளது.

ஒழுக்கத்திற்கும் சமயப்பற்றுக்கும் உள்ள பரிசு விண்ணுலகில் இன்பம் துய்ப்பதாகும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. இருக்கு வேதத்தில் இறப்புற்றிய பாடல் (ஓ-14) இறப்போடு தொடர்புடைய பல நம்பிக்கைகளைக் கூறுகின்றது. இறந்த உடலை அக்கியேபிதிரரும் தேவரும் உறையும் மறு உலகுக்கு எடுத்துச் செல்வதாக இப்பாடல் குறிப்பிடப்படுகின்றது. இருக்கு வேதத்தில் யமனே இறப்புக்குரிய தெய்வமாகச் சித்தரிக்கப்படுகின்றான். இறந்தோருக்குரிய பாதையை வகுத்தவனும் அவனேயாவான். யமனோடு சேருவதற்கு இறந்தவர் நல்வினைப் பயன்களோடு செல்லவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. ஒருவனது நல்வினைத் தேட்டமே இறப்பின் பின் மறு உலகில் உயர்ந்த பேற்றினை நல்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருக்கு வேதப்பாடல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இறப்பின் பின் உள்ள நிலை பற்றி இருக்குவேதம் கூறும் சிந்தனையின் வளர்ச்சியாகவே உபநிடத சிந்தனைகள் அமைகின்றன எனக்கொள்ளலாம். இம்மண்ணுலக வாழ்வுக்குப் பின் மனிதன் எங்கே செல்கின்றான்? மரணத்துக்குப் பின் ஆத்மாவின் நிலை என்ன என்பது போன்ற வினாக்களுக்கு உபநிடதங்கள் விடையளிக்கின்றன. அநாதியாகிய ஆன்மா இவ்வுலகில் தாய் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பப் பல்வேறு பிறப்புகளுக்கு உட்படும் நியதியை உள்ளடக்கியதே கருமக்கோட்பாடு ஆகும். 'வினை விதைத்தவன் வினையறுப்பான்*f* தினை விதைத்தவன் தினையறுப்பான்'' என்ற

நியதிக்கேற்பச் சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றும் பிறவியைத் தீர்மானிக்கின்றன. நாம் இப்போது இருக்கும் நிலைக்கு நமது முன்னைய கருமங்களே காரணமாக அமைகின்றன எனவும் எதிர்காலத்தில் எமது நிலையை இன்று நாம் ஆற்றுகின்ற கருமங்களே தீர்மானிக்கும் எனவும் இக்கோட்பாடு விளக்கி நிற்கின்றது. மனிதரிடையேயுள்ள பிறவிக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் உரிய விளக்கமாக இது அமைகின்றது.

சைவசித்தாந்தத்தில் வினை பற்றிய கருத்துக்கள் மிகத் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. உயிர்கள் அறிவோடும் அறியாமையோடும் கூடியிருக்கின்றன. உலக வாழ்வால் உயிர் அறிவு விளக்கம் பெறுவதால் உயிருக்கு அறியாமை செயற்கையாகவே இருத்தல் வேண்டும். இவ்வறியாமையைப் பேரறிவுப் பொருளாகிய இறைவன் விளைவித்திருக்கமாட்டான். வேறொரு பொருளே இதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும். இப்பொருளையே சைவசித்தாந்தம் ஆணவமலம் என்று குறிப்பிடுகின்றது. இப்பொருளை இறைவன் உண்டாக்கயிருக்கமாட்டானாதலால் இதுவும் எவராலும் உண்டாக்கப்படாதது என்றும் உள்ள பொருள் என்றும் உயிர்கள் தம் எளிய இயல்பால் மயக்குத்தன்மையுடைய இப்பொருளை அநாதியே பற்றி அறியாமைக்குள்ளாயின என்றும் இம்மலத்தை நீக்குவதற்காகவே தனக்கென ஒரு தேவையும் இல்லாத இறைவன் கருணை ஒன்றே காரணமாக உயிர்களுக்கு இயற்கையிலிருந்து உலகையும் உடல்களையும் படைத்தருளியிருக்கின்றான் என்றும் சைவசித்தாந்ததம் கூறுகிறது. அறிவுடைய பொருட்கள் தம் அனுபவத்தாலே பயன் பெறுதல் வேண்டும். எனவே, உயிர்கள் அனுபவம் பெறும் பொருட்டே இறைவன் உலகையும் உடல்களையும் படைத்தருளியுள்ளான். உயிர்கள் உடல்களைக் கொண்ட உலகில் வினைகளைச் செய்து அனுபவம் பெற்று அவ்வனுபவத்தால் ஆணவ மலக்கட்டிலிருந்து விடுதலை அடைகின்றன. எனவே வினை, சைவசித்தாந்தத்தில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

'நன்மை செய்தால் நன்மை விளைய வேண்டும். தீமை செய்தால் தீமை விளைய வேண்டும்'' என்ற நியதி அறிவுக்குப் பொருத்தமான ஒன்றாகும். ஆனால் உலக வாழ்க்கையில் நல்லவர்கள் துயருறுவதும் தீயவர் பலர் செழிப்புடன் வாழ்வதும் நாம் காணக்கூடிய விடயங்களாகும். அறிவியல்வாதிகள் இதற்குரிய விளக்கங்களை அளித்துள்ளபோதும் நியதி தப்பாமல் வினைப்பயன்கள் வர வேண்டும் என்பதில் சைவசித்தாந்தம் உறுதியாகவுள்ளது. நடுநிலையாளனாகிய இறைவன் உலகை நடத்தும்போது ஒருவர் ஏழையாக மற்றொருவர் செல்வந்தராக பிறிதொருவர் நோயாளியாகவெவ்வேறு நிலைகளில் இருக்கக் காரணம் என்ன என்பது சிந்திக்கற் பாலதாகும்.

உயிர்களை வினைகளைச் செய்து ஆணவமலப்பற்றை நீக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே இறைவன் உலகைப் படைத்துள்ளான். தமக்குக் கிடைத்த வாய்ப்பைக் கொண்டு திருத்தம் பெறாது இறந்து போகும் உயிர்கள், வினையாற்றி ஆணவ மல நீக்கம் பெற மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டுமென்ற காரணத்தால் அவை மீண்டும் பிறக்கும் எனக்கூறப்படுதல் பொருத்தமாகவேயுள்ளது. இதனால்உயிர்களுக்கு அடுத்து பிறவியுண்டென நம்பவேண்டியுள்ளது. எனவே, அதற்கு முற்பிறவியும் இருந்திருக்க வேண்டுமென்பதும் பெறப்படுகிறது. இப்பிறவியில் செய்யும் நல்வினைக்குப் பயன் நமக்குக் கிடைக்கவில்லையென்றால் இறைவன் அடுத்த பிறவியிலாவது நமக்கு அப்பயனைத் தருவான் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. எனவே, ஒவ்வொரு பிறவியிலும் செய்த வினைகளுக்கேற்பவே பிறவிப்பயன் கிட்டுகின்றது. முற்பிறவியிலே செய்த வினைகளுக்கேற்றவாறே இப்பிறவியின் வாழ்க்கை அமையுமாதலால் மக்கள் வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

சமண, பௌத்த சமயங்கள் வினைபற்றிய உண்மையை ஒப்புக்கொள்ளுமிடத்தும் வினைப்பயன்கள் தாமே வருமென்று அவை கூறுகின்றன. நியதி தப்பாமல் அவ்வுயிர்க்குப் பயனை ஊட்ட வினைக்கு அறிவில்லை. எனவே, பேரறிவுப் பொருளாகிய இறைவனே உயிர்களின் நிலையினை அறிந்து நியதி பிறழாமல் வினைப்பயனை ஊட்டவேண்டும் எனச் சைவசித்தாந்தம் கூறும். உயிர்களின் நன்மைக்காக இறைவன் காலமறிந்து அளவறிந்து பல்வேறு நிலைகளில் வினைகளுக்குரிய பயனை ஊட்டுகின்றான்.

இப்பொழுது நல்வினை செய்யும் உயிர், அதன் பயனை நுகராமல் முன்னைய தீவினைப் பயனை இப்பிறவியில் நுகர்வதால் அதன் அறிவிலே பல திருத்தங்கள் உண்டாகின்றன. அதுபோன்றே தீவினையைச் செய்யும் உயிர் நல்வினைப் பயனை நுகர்வதால் பல திருத்தங்களை அடைகின்றது. இதனால்நியதியை மாற்றாமல் ஏனையவற்றை இறைவன் மாற்றுகின்றான். உடலை மாற்றினாலும் காலம் இடத்தை மாற்றினாலும் செய்த வினைக்குரிய பயனை நியதி தப்பாமல் உயிரே அனுபவிப்பதால் பயன் கிட்டுகின்றது. ஆணவமல

நீக்கத்திற்காகவே இறைவன் வினைப்பயன்களை ஊட்டுகிறானேயன்றி, செய்த வினையின் பயனை அனுபவித்தே ஆக வேண்டும் என்பதற்காகவன்று, வினைப்பயனால் உயிர்கள் திருத்தம் பெறுகின்றன.

சைவசித்தாந்தம் மூவகை வினைகளைக் குறிப்பிடுகின்றது. சஞ்சிதம் என்பது முற்பிறப்புக்களில் செய்து அனுபவிக்கப்படாமல் எஞ்சி நிற்கும் வினைத்தொகுதியாகும். பிரார்த்தம் அத்தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டு, இப்பிறவியில் அனுபவத்திற்கு வரும் வினைப்பகுதியாகும். இதனையே ஊழ்வினை எனக் கூறுவர். ஆகாமியம் இப்பிறவியில் செய்யப்படும் வினைகளாகும். முற்பிறவியில் நாம் என்ன வினை செய்திருக்கிறோம் என்பதை நாம் அறியவொட்டாமல் இறைவனின் திரோதான சத்தி மறைத்துவிடுகின்றது.

அப்படி மறைத்தால் தான் நாம் ஊக்கத்தோடு மேல்வினை செய்வோம். ஆனால் செய்த வினையின் வாசனை மட்டும் நம்மிடையே இருந்து இப்பிறவியில் நாம் செய்யும் முயற்சிக்குத் தூண்டுகோலாகவுள்ளது. நாம் முற்பிறப்புகளில் செய்துள்ள வினைகளுக்குரிய பயன்களில் என்னென்ன பயன்களை ஊட்டினால் இப்பிறவியில் நமக்கு ஆணவலமல நெகிழ்ச்சி ஏற்படுமென்பதை அறிந்து இறைவன் அவற்றை ஊழாக அமைக்கின்றான். எனவே, பிரார்த்தமாகிய ஊழ், நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் அவற்றைப் பெறுவதற்குரிய காலம், அளவு, இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றுக்கும் ஏதுவாக அமைகின்றது. ஊழுக்கும் முயற்சிக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தின் வாயிலாகத்தான் உயிர்கள் ஆணவமலக் கட்டினின்றும் விடுபடுகின்றன. இப்போராட்டம் இல்லாவிடில் உயிர்கள் முன்னேற இடமில்லாது போய் விடும். நாம் உய்வு பெறவும் இதுவே உதவுகின்றது. மிகவும் முனைந்து செய்யும் முயற்சிக்கு இம்மையிலேயே பயன் உண்டு.

அறவாழ்க்கையால் ஆணவ நெகிழ்ச்சி உண்டாகும். எந்த அளவுக்கு நெகிழ்ச்சி உண்டாகின்றதோ அந்த அளவுக்கு ஊழ்வினையின் தாக்குதல் குறையும். நல்லொழுக்கம், நற்சிந்தனை, பிறர் நலம் பேணல் உயிர்களிடத்து அன்பு கொள்ளல் ஆகியவற்றால் ஆணவமலம் நெகிழும் வாய்ப்புண்டு. இறைவழிபாடும் இதற்கு மிகுந்த துணை செய்யும். சைவசித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று மார்க்கங்களும் நான்காவதாகிய ஞானத்திற்கு இறைவழி ஊழ்வினையின் தாக்கத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் ஒருசில ஊழ்வினைப் பயனை முழுதும் வெல்வதற்கும் சிறந்த சாதனமாகும்.

வினைகளை ஆற்றி, ஆற்றி இன்பதுன்ப அனுபவங்களைப் பெற்று வரும் உயிர் சிறிது சிறிதாகப் பயன் கருதாது வினையாற்றும் பக்குவத்தினைப் பெறும். பகவத்கீதை கர்மயோகத்தின் வழி எடுத்துக்கூறும் கர்மசந்நியாசம் இத்தகையதே. பயன் கருதாது வினையாற்றும் திறத்தினால் ஆணவமல நெகிழ்ச்சி ஏற்பட்டு, நல்வினை தீவினை இரண்டையுமே ஒப்புநோக்கி அவற்றால் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையுமே பொருட்படுத்தாமல் பற்றற்று இறையருள்ள நாடி நிற்கும் நிலையுண்டாகும். உயிர் தன் அறிவில் இரு வினைகளையும் ஒப்பநோக்கி, பற்றின்றி வாழ்தலையே ‘இருவினையொப்பு’’ எனக் கூறுவர். இருவினையையும் ஒப்பநோக்கி இறையருளை நாடி நிற்கும் உயிரின் பக்குவம் கண்டு இறைவனே குருவாக வந்து காட்சி கொடுத்து அதற்கு ஞானத்தை உணர்த்துவான். சமயாசாரியரின் வாழ்க்கை அனுபவங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஒவ்வொரு உயிரும் பிறவிதோறும் பக்குவமடைந்து மும்மல நீக்கம் பெற்றுப் பிறவாப் பெருநிலை எய்துவதே நோக்கம் என்பதைச் சைவசித்தாந்தம் தனிப்பெருங்கொள்கையாக எடுத்துக் கூறுகின்றது.

உபநிடதங்களில் பிறவி பற்றி வரும் கருத்துக்களும் சிந்தனைக்குரியன. இவ்வுலகில் சரீரந்தோறும் தம்மால் செய்யப்பட்ட கருமத்தின் பலனை அனுபவிப்பவர்களாய் இருதய குகையில் இருவர் புகுந்துறைகின்றனர். அவரவர் கருமத்துக்கும் ஞானத்துக்கும் தக்கவாறே வேறு உடல்களையோ தாவர நிலையையோ அடைகின்றனர். மனிதன் பூண்டுபோல அழிகின்றான்*f* மீண்டும் பூண்டுபோல் உண்டாகின்றான். ‘ஒருவன் சரீரம் விழுவதற்கு முன்பே ஆத்மப் பொருளை அறிவதற்கு முடியாதவனாகப் போவானாகில் பின்னர் மீண்டும் சரீரத்தை அடைந்தவனாகப் போவானாகில் பின்னர் மீண்டும் சரீரத்தை அடைந்தவனாகின்றான்’’ எனக் கடோப நிடதம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பிறப்பின் நியதியைக் கூறும் உபநிடதங்கள் பிறப்பற்ற நிலையை அடைவதற்குரிய வழிவகைகளையும் கூறுகின்றன.

‘‘எப்போதும் அடக்கப்பட்ட மனதுடனும் விவேகமுள்ள புத்தியுடனும் கூடியவன் எவனோ அவனுக்குச் சாரதிக்கடங்கிய நல்ல குதிரைகள் போன்று ஐம்புலன்கள் வசப்பட்டவையாகின்றன. எப்போதும் விவேகமற்றவனாகவும் அடங்காத மனதுடையவனாகவும் அழுக்குடைவனாயும் உள்ளவன் எவனோ அவன்

சேரவேண்டிய பரமபதத்தைச் சேரமாட்டான். மீண்டும் மீண்டும் பிறவிப் பாதையிலேயே சென்று கொண்டிருப்பான். எப்போதும் விவேகத்துடனும் அடங்கிய மனத்துடனும் கூடியவனாகவும் பரிசுத்தமானவனாகவும் உள்ளவன் எவனோ அவன் மீண்டும் பிறப்பதில்லை. அவன் பரமபதத்தை அடைகின்றான். எப்போது ஒருவனுடைய உள்ளத்திலே பொதிந்துள்ள ஆசைகள் யாவும் ஒழிகின்றனவோ அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான். எப்போது இருதயத்தில் அறியாமை, அகங்காரம் ஆகியவற்றின் காரணமாய் உண்டான முடிச்சுகள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்துபோகின்றனவோ அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான்'' (கடோபநிடதம்: 3.6: 5,14)

உபநிடதம் தரும் இத்தகைய சிந்தனைகள் ஒருவனது ஆன்மீக வாழ்க்கைக்குப் பெரிதும் வேண்டற்பாலன.
ஆன்மா அழிவற்றது: உடல்கள் அழியக்கூடியவை என்பதைப் பகவத்கீதை தெளிவாகக்கூறுகின்றது. நித்தியமாய், அழிவற்றதாய், அளப்பரியதாய் உள்ள ஆன்மாவின் இவ்வுடல்கள் யாவும் அழியுந்தன்மையுடையவை. (கீதை 2-18) பிறத்தல், இறத்தல், வளர்த்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் ஆகிய ஆறுவித பாபவிகாரங்கள் உடலுக்கு உண்டு. ஆனால், ஆத்மாவுக்கு விகாரம் இல்லை (கீதை 2.20) பிறப்புப்பற்றியும் கீதை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. 'பழுதுபட்ட துணிகளைக் களைந்து விட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக் கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்துப் புதியனவற்றுள் புகுகின்றது. இவ்வாறு புதிய பிறப்புக்கு ஏதுவாக அமைவன வினைகளேயாம். (கீதை 2.22). 'பிறந்தவன் இறப்பதும் இறந்தவன் பிறப்பதும் உறுதியெனின் விலக்கமுடியாத இவ்விடயத்தில் மக்கள் வருந்துவது பொருத்தமாகாது'' எனக் கீதை உபதேசிக்கின்றது. (2.27). ஒருவன் முத்தியடையும் வரை இந்நிலை தொடரும். பற்றுக்கு ஆளாயிருக்கும் வரை பிறப்பதும் இறப்பதும் இயல்பு என்பதும் வினையின்படி வருகின்ற மரணத்தை தடுக்க யாருக்கும் இயலாது என்பதும் உணர்த்தப்படுகின்றது. ஆத்ம தத்துவத்தைப் பற்றிக் கூறி கீதை ஆத்ம விமோசனத்திற்கும் வழிகூறி நிற்கின்றது. உள்ளத்திலே நடுவு நிலையோடு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்துப் பிறவித்தளை நீங்கிக் கேடில்லாத பெருநிலை அடைகின்றனர். (கீதை 2 51) மனத்தில் எழுகின்ற ஆசைகளைஅகற்றி, ஆத்மாவில் ஆத்மதிருப்தி அடைந்திருப்பவன் ஸ்திதப்பிரக்ஞன என்று கீதை குறிப்பிடுகின்றது (கீதை 2.55) நலமும் கேடும் கலந்துள்ளது உலகம். பற்றுடையார்க்கு அது இன்பதுன்பத்தை விளைவிக்கிறது. பற்றற்ற ஞானி அத்தகைய விளைவுகளுக்கு ஆட்படுவதில்லை. எவன் பற்றற்றவனாய் நலம் வரும்போது மகிழாமலும் கேடுவரும்போது துயரடையாமலும் இருக்கிறானோ அவனுடைய அறிவுஉறுதிபெறுகின்றது''என்பது கீதையின்போதனையாகும் (2.57)
யாகத்தில் எஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். ஆனால், தங்கள் பொருட்டே உணவைச் சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர். (கீதை 3.13). எச் செயலைச் செய்தாலும் அதன் மூலம் உலக நன்மையும் இறைவனது பெருமையும் முன்னணியில் நிற்றல் வேண்டும். தான், தனது என்னும் செருக்குப் பின்னணிக்குப் போகுமளவு அது புண்ணியச் செயலாகக் கருதப்படுகின்றது. நித்திய கடமையில் இதற்குரிய உதாரணத்தைக் குறிப்பிடுமிடத்து, அன்றாடம் சமைத்து உணவை மற்றவர்களுக்கு முதலில் வழங்கிவிட்டு, எஞ்சியதை உண்பவன் மேலோன். இவ்வாழ்வான் ஒருவன் ஐம்பெரும் வேள்விகளைச் செய்யக் கடமைப்பட்டவன். தேவயக்ஞம் என்பது கடவுள் வழிபாடு. அடுத்து பிரமயக்ஞம் என்பது உலக நன்மையின் பொருட்டுச் சான்றோர் அமைத்த தெய்வநெறி நூல்களை முறையாக ஆராய்வதும் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்து ஓதுவதும் ஆகும். இது ரிஷிகளைப் போற்றுவதற்கு ஒப்பாகும். நூல்களை ஓதுதல் பிரமயக்ஞமாகும். பத்ருயக்ஞம் வரும் உடலுடன் கூடிய வாழ்க்கையில் தம்முன்னோர்க்கும் கடப்பாடுடையவன் ஆகின்றான். எனவே, அவர்களைக் குறித்து நாம் வழிபடுதல் வேண்டும். உயிரோடிருக்கும் பெற்றோருக்குப் பணிவிடை நாள்தோறும் செய்வதும் இதன்பாற்படும் நான்காதாகிய நரயக்ஞம் மக்களது பசியைப் போக்குதல், பிணியை நீக்குதல், வாழ்க்கையைப் பண்படுத்துதல், கல்வியைப் பெருக்குதல் இவை யாவற்றையும் உள்ளடக்கியது ஐந்தாவதாகிய பூதயக்ஞம் ஆடு, மாடு முதலிய உயிரினங்களைப் பேணிவருதலைக் குறிக்கும். இந்த ஐவகை யக்ஞத்தில் மனிதன் உறுதியாக ஈடுபடுமிடத்து ஆத்மீக நலம் கிட்டுகின்றது.
ஒருவன் ஆன்மீக மேம்பாடு அடைய விரும்பின் பிறப்பு, இறப்பு என்ற பெருங்கடலில் மூழ்காது தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனெனில் தானே தனக்கு

நண்பன், தானே தனக்குப் பகை என்று கீதை உபதேசிக்கின்றது. (கீதை 6.5) ஆத்ம மேம்பாட்டுக்குத் தியானம் ஒரு சிறந்த சாதனையாகக் கீதை குறிப்பிடுகிறது. மனதைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கியயோகி, இறைவனிடத்தில் முக்திநிலையில் நிறைவு பெறுகின்ற சாந்தி எய்துகிறான். (5.15) இறைவனை பக்தியுடன் வழிபடுபவர்க்குப் புத்தியோகம் கைவரப் பெற்று இறைவனை அடைகின்றனர். இறைவன் அவர்களுக்கு அருள் கொண்டு அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞானச் சுடர்விளக்காய அறியாமை என்னும் இருளை அகற்றிவிடுகின்றார். (கீதை 10- 10-11) இறைவனை அடைந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்பது கீதையின் போதனை அனைத்துத் தர்மங்களையும் இறைவனுக்கென்றே அர்ப்பணஞ் செய்து அவனைச் சரணடைதல் வேண்டும். அப்பொழுது இறைவன் அனைத்துப் பாவங்களில் இருந்தும் எம்மை ஈடேற்றுவான். கவலையும் ஒழியும் (கீதை 16.66) என்ற உபதேசம் ஆத்மீக மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக அமைவதாகும்.

மகாபாரதத்தில் கீதையைப் போன்று ஆத்மீக சிந்தனைகளை நல்குவது ஸநத் - சுஜாதியம் என்ற ஒப்பற்ற தத்துவப் பகுதியாகும். ஸநத் சுஜாதமா என்ற பிரம்ம ஞானி திருதராட்டிரனுக்குப் பிரம்மத்தின் தத்துவத்தை உபதேசித்த வாயிலாக எழுந்ததே ஸநத் - சுஜாதீயம். ஆத்மீகத்தாகம் உள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம். மரணத்தைப் பற்றிய உண்மை இதில் விளக்கப்படுகின்றது. வாழ்க்கையை நன்கு அறிய முயல்பவன் மரணத்தை உள்ளவாறே அறியவேண்டும். பிறப்பையும் இறப்பையும் இரு எல்லைக்கோடுகளாக அமையப் பெற்றதே வாழ்க்கை. வாழ்க்கையை ஆராய்பவன் முன்னைய இரண்டினைப்பற்றியும் தெளிவடைதல் அவசியமாகும். கடோபநிடதம், கீதை முதலியவை மரணம் பற்றிய தெளிவை எடுபடுத்துவதுபோல, இப்பகுதியும் மரணத்தைப் பற்றிய விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. நாம் இறைத்தன்மை பெற்றவர்கள் சத், சித், ஆனந்தம் என்ற நிலைகளை மறவாது வாழ்தலே நமக்கு இயல்பான வாழ்க்கையாகின்றது. இதனை மறத்தலே மரணம். அறியாமையே பிறப்புக்குக் காரணம். அகங்காரமே மரணத்திற்கு அடிகோலும் அடிப்படையான பெருந்தீங்கு எனக் குறிப்பிடப்படுகின்றது. அகங்காரத்தில் தோன்றும் மரணத்தைக் கடக்க ஞானத்தில் நிலையைக் கண்டு அஞ்சுவதில்லையென உபதேசிக்கின்றது சுஜாதீயம்.

உடல் உயிரோடு இருக்கும்போதே ஆற்ற வேண்டிய நற்கருமங்கள் பற்றி நாயன்மார்கள் வற்புறுத்தியுள்ளனர். நாம் பிறப்பதும், இறப்பதும் எப்போதும் நிகழும் என்பதை யாரும் நிச்சமாக கூற முடியாது, இந்த உடலின் இறைவன் ஆன்மாவை வைத்ததன் நோக்கம் பிறப்பிபிறப்பென்னும் உடலையில் உருக்கி உருக்கி ஆன்மாவைச் சூழும் கழிம்பறுத்தலேயாம். இப்பிறவி நிலையில்லை. இதோ சாவு வருகிறது. நாளை வீணாக்காமல் இறைவனை வணங்க வேண்டும் என்பது அடிக்கடி வற்புறுத்தப்படுகிறது. பிறவிப்பிணி நீங்குவதற்குச் சம்பந்தர் சிறந்த வழி கூறுகின்றார். ‘எந்தையே எம்பெருமானே அப்பனே ஆட்கொள்’’, என்று ஆர்வத்துடன் இறைஞ்சி முழுமுதல்வராகிய இறைவன் திருவடிகளில் அன்றாடம் அர்ச்சிக்க வேண்டிய மலர்களைத் தலையாரச் சுமந்து சென்று அர்ச்சித்து வழிபடுவதும் இறைவனது அதியற்புதமான பெருமைகளைச் செவியாரக் கேட்டுச் சிந்தித்து மகிழ்வதும் அவனது திருநாமங்களை நாவார உள்ளம் உருக உச்சரித்து வழிபடுவதும் சிறந்த வழிபாடாகும் என்பதை.

**“நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்**
**சாநாளும் வாழ்நாளுஞ் சாய்காட்டெம் பெருமாற்கே**
**பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப**
**நாநாளும் நவின்றெத்தப் பெறலாமே நல்வினையே’’ எனக் குறிப்பிடுகின்றார்.**

மணிவாசகரின் திருவாசகமாகிய தேன் பிறவித்துன்பம் நீக்கும் மருந்து, மனித வாழ்வில் அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைவன. தொல்லையுரும் பிறவி நீங்க வழிவகுப்பது திருவாசகத் தேன் ஆகும். சிவபுராணத்திலே.

**“சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்’’ எனப் போற்றுகின்றனர்.**

பிறந்து இறந்து மீண்டும் பிறந்து பரிதவிக்கின்ற மாக்களாகிய எமக்கு ஆத்மீக ஞானியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்பவர் மாணிக்கவாசகர். அவர் தரும் திருவாசகம் சிவநெறி காட்டும் உயர் தனி வழி. இந்த உடம்பினுள் உள்ள உத்தமனைக் கண்டு பிறவிப் பயனைப் பெற்று விட வேண்டும். அப்பயனைப்

பெறாது வீணே உடம்பைச் சுமந்து அலைதல் அறிவுடைமையாகாது. உடம்பு உள்ளபோதே உடம்பினாலாய பயனைப் பெற்றுவிட்ட உத்தமஞானிகள் இந்த உடம்புடன் வாழ்வதை விரும்புவதில்லை. மணிவாசக சுவாமிகள் இந்த உடம்புடன் இருப்பது பற்றிப் பொறுக்கவில்லையே என்ற பொருளில் ‘ஆற்றேன்’’ எனக் கூறுகின்றார். ‘வேற்று விகார விடக்குடும்பின் உட்கிடப்ப ஆற்றேன்’’ என உரைக்கின்றார்.

இந்த உடம்பினாலாய பயனாகிய சிவபோகத்தைப் பெற்று உய்வதற்கு மணிவாசகர் கூறும் வழிகள் குறிப்பிடத்தக்கன:

**ஆமாறு உன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்**<br>
**பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தெளிர்**<br>
**கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்**<br>
**சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.**

எனப் பாடுகின்றார். உலகிலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு ஆறுவழிகளைக் கூறுகின்றார். உனது திருவடியை நினைந்து உள்ளம் குழைய வேண்டும். மனம் தழலிடைப்பட்ட மெழுகுபோல உருக வேண்டும். நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்துத் துதிக்க வேண்டும். உனது புகழை இனிது ஓத வேண்டும். உனது திருக்கோயிலைக் கூட்டி மெழுக வேண்டும். ஆனந்த மிகுதியால் ஆடவேண்டும் என்பது மணிவாசகர் காட்டும் ஆத்மீக வழிகளாகும்.

காரைக்காலம்மையார் இறைவன் தாள் சேரும் நிலையில் கிட்டும் அனுபவத்தை அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுமிடத்து,

**“இனியோம் நாம் உய்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்**<br>
**இனியோர் இடாஇல்லோம் நெஞ்சே - இனியோர்**<br>
**வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப்பிறவிக்**<br>
**கனைக்கடலை நீந்தினோம் காண்’’ எனக் கூறுகின்றார்.**


வள்ளுவரும் இதேநிலையை,


**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**<br>
**இறைவன் அடி சேரா தவர்’’ எனக் குறிப்பிடுகின்றார்.**

இவற்றால் பிறவிப் பெருங்கடலை நீந்துவதே ஆத்மீக வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என்பது பெறப்படுகின்றது.

இந்து சமய மரபிலே ஆத்மீக வாழ்வுக் கேற்ற வழி வகைகள் எண்ணற்றவையாக உள்ளன. அறவற்றில் ஏதாவதொன்றைப் பற்றுக் கோடாகக் கொண்ட ஆத்ம நலம்பெற எவருக்கும் வாய்ப்புண்டு. பிறவிப் பயனைப்பெற எமது உடலைப் பயன்படுத்துவதே சிறந்த முயற்சியாகும். உடம்பினுள் உள்ள ஆத்மாவைக் காண முயல்வது பெருஞ்சாதனையாக அமைவதோடு விடுதலைக்குரிய வழியாகவும் அமைவதாகும். இப்பிறவியை உரிய வாய்ப்பாகக் கொண்டு ஆத்மீக வாழ்வில் மேன்மை அடைதல் வேண்டும் என்பதைச் சமயத் திருநூல்களும் அனுபூதிமான்களின் அருள் வாக்குகளும் எடுத்தியம்புகின்றன.

ஆத்மீக வாழ்வு பற்றி அன்று முதல் இன்று வரை வளர்ச்சி பெற்ற கருத்துக்கள் எமது சிந்தனைக்கு என்றென்றும் விருந்தாக அமைவதோடு வாழ்வை வளம்படுத்துவனவாகவும் உள்ளன.





# Quatations

"Devoid of beginning,duration and ending,by nature immaculate,powerful,omniscient,supremely perfect-thus is Siva spoken of in Saivite tradition"

-Ajita Agama

"Uequalled,free from pain,subtle,all-pervading,unending,unchanging,incapable of decay,sovereign-such is the essence of Siva,Lord of the summit of all paths".

-Svayambhuva Agama

"Pure consciousness,taking form as knowledge and action,is present in the soul everywhere and always,for the soul is universal in its unfettered state".

-Mrigendra Agama

"The bodily from the Almighty, being constituted of powers,is not comparable to ours.Most conspicuous is the absence of anava.His bodily form,having a head,etc is composed of five mantras, corresponding each to the five activities-Isa,Tat Purusha,Aghora,Vama and Aja ".

-Mrigendra Agama

"The three impurities are anava,maya and the one caused by actions".

-Suprabheda Agama

"Pure consciousness, taking from as knowledge and action, is present in the soul everywhere and always, for the soul is universal in its unfettered state".

-Mrigendra Agama

"The three impurities are anava, maya and the one caused by actions".


-Suprabheda Agama

"All those visibles and invisibles, movables and immovables are pervaded by Me. All the worlds existing in the tattvas from Sakthi to prithivi (earth) exist in Me. Whether is heard or seen, internally or externally, is pervaded by Me ".

-Sarvajnanottara Agama

"Recognation of the world as the manifestation of Sakti is worship of Sakti.Pure knowlrdge, unrelated to objectes, is absolute".

-Devikalottara Agama



**சிவலிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் அதிசய முடிவு**

சிவலிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் அதிசய முடிவு.

(taken from Lankasri)

சிவலிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் கிடைத்த முடுவு.... ஒரு ரெண்டு நிமிஷம் நேரத்தை ஒதுக்கி ரஷ்ய விஞ்ஞானி சொல்வதை படித்து யாருங்கள்.

ஒவ்வொரு இந்துவும் படித்து பகிர வேண்டிய அரிய விசயம்.

சிவலிங்கம் பற்றிய டாக்டர் விளாதிமீரின் என்பவரின் ஆராய்ச்சி மிக வித்தியாசமானது.

அது இந்தப் பூமியில் மொத்தம் எத்தனை லிங்கங்கள் உள்ளன என்று எண்ணிப் பார்க்கவோ, இல்லை அவற்றின் பூர்வ புராணக் கதைகளை அறியவோ முயலவில்லை.

இவற்றுக்கப்பால் சிவலிங்கங்கள் பற்றி நாம் யோசிக்கவும் அதை நாம் நேசிக்கவும் நிறைய அடிப்படைகள் இருப்பதாக டாக்டர் விளாதிமீர் கருதினார்.

அதில் முதலானது, ஸ்தூல வடிவங்களில் இறை உருவங்களை உருவாக்கி வழிபாடு செய்யும் இந்து மதத்தில் ஒரு குழவிக் கல்லைப் போன்ற லிங்கம் என்னும் உருவமற்ற ஒரு உருவம் எப்படி உட்புகுந்தது என்பது தான்..

உண்மையில் லிங்க சொரூபமானது மூன்று மதத்திற்கும், புத்த ஜைனர்களுக்க்ம் கூட பொதுவானது என்பதையும் அவர் கண்டுபிடித்தார்.

ஒரு மலை உச்சி அதில் பௌர்ணமி இரவில் கரிய நிழல் உருவாய் கண்ணுக்கு தெரிந்த லிங்க உருவத்தை ஒரு கிருத்துவன் சிலுவைச் சின்னமாகப் பார்த்தான்.

ஒரு இஸ்லாமியன் தங்களின் மசூதிக் கூறை தெரிவதாக் கருதினார்.

புத்த ஜைன சன்னியாசிகள் தங்களின் குருமகாங்கள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருப்பதகக் கருதினார்கள்.

ஒரு இந்துவோ அது சிவலிங்கம் என்று திடமாக கருதி இருந்த இடத்தில் இருந்தே விஸ்வ இலைகளை வாரி வாரி அர்ச்சித்தான்.

உருவம் ஒன்று.ஆனால் அனைத்து மார்க்க தரிசிகளையும் அது திருப்திப் படுத்தியது என்றால் சிவம்தான் முதலும் முடிவுமான அனைவருக்கும் பொதுவான இறை ஸ்வருபமா?

டாக்டர் விளாதிமீர் இப்படித்தான் கேட்கிறார்.

மேலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் சிவம் பற்றி சொன்னதை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

லிங்க உருவம் பற்றி யாரும் சரியர் உணரவில்லை என்பதுதான் அவரது கருத்து.

ஒரு ரஷ்யாநாட்டு பிரஜையாக இருந்தாலும் சிவலிங்க சொரூபம் அவருக்குள் ஆழமான பாதிப்புகளை உருவாக்கியதாக அவர் கூறுகிறார்.

லிங்கம், சதுரம்,, செவ்வகம், வட்டம், முக்கோணம், என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், ஒவ்வொரு கோணத்தில் இருந்து பார்க்கும்பொதும் ஒரு பொருள் தருவதாகவும் இருக்கிறது என்பது அவர் கருத்து.

குறிப்பாக அணு தத்துவம் சிவலிங்க சொரூபத்துக்குள் விலாவாரியாக இருக்கிறது.

லிங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தால், அது மழை தரும், நெருப்புத் தரும், காற்று தரும் கேட்ட எல்லாம் தரும் என்றும் நம்புகிறார்.

அப்படி என்றால் சிவமாகிய லிங்க ஸ்வரூபம் என்பது மானுடர்கள் பதன்படுத்தத் தெரியாமல் வைத்திருக்கும் மகத்தான எந்திரமா..?

டாக்டர் விளாதிமீரின் சிவஸ்வரூப ஆராய்ச்சியில் ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் ஒன்றும் அவருக்கு கிட்டியதாம்.

இந்த மண்ணில் பூமிக்கு மேலாக கண்ணுக்கு தெரியும் விதத்தில் உள்ள லிங்க ஸ்வரூபங்கள் இல்லாமல் பூமிக்குள் புதைந்து கிடக்கும் ஸ்வரூபங்களும் ஏராளமாம்!.
அதுவே அவ்வப்போது ஸ்வயம்பு மூர்த்தியாய் வெளிப்படுகிறதாம்.
ஸ்வயம்பு மூர்த்திகளின் பின்புலத்தில் பஞ்சபூத சக்திகளின் இயக்கம் ஒரு சீராகவும், ஆச்சரியம் ஊட்டும் வித்த்தில் ஒன்றோடொன்று பின்னிபிணைந்த கூட்டுறவோடும் செயல்படுகிறதாம்.
சுருக்கமாக சொன்னால், அந்த மூர்த்தங்களைப் பஞ்ச பூதங்கள் ஆராதிக்கின்றன என்பதே உண்மை என்கிறார்.
இப்படிப்பட்ட ஆராதனைக்குறிய இடங்களில் கூர்ந்து கவனித்தபோது பஞ்ச பூதங்களும் சம அளவிலும் அத்துடன் சீரான இயக்கத்துடனும் அவை இருக்கின்றன.
மனித சரீரத்திலும் பஞ்ச பூதங்கள் உள்ளன.
இவை சுயம்புலிங்க ஸ்தலங்களில் இயற்கையோடு கூடிச் செயல்படுகின்றன என்கிறார்.
அதாவது சுயம்பு மூர்த்தி உள்ள ஸ்தலங்களில் வாழும் மனிதர்களே அந்த மண்ணுக்கான மழை.காற்று, அக்கினி, மண்வளம், ஆகியவகளைத் தீர்மானிக்கிறார்கள் என்றீ கூறும் விளாதிமீர் மதுரை போன்ற சுயம்புலிங்க ஸ்தலங்களில் கூடுதலான மழை அல்லது குறைவான மழைக்கு அங்கு வாழும் மக்களின் மனநிலையே காரணமாகிறது என்கிறார்.
சுயம்பு லிங்கங்கள் உள்ள மக்கள் மனது வைத்தால் அங்கே எதை வேண்டுமானாலும் உருவாக்கிட இயலும் என்றும் கூறுகிண்றார்.
இந்த பூமியானது சூரியன் உதிர்ந்த ஓறு சிறிய அக்கினித் துளி என்கிறது விஞ்ஞானம்.
மெல்லக் குளிர்ந்த இதில் அடுக்கடுக்காய் உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன.
அந்த உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கூட அப்போது தோன்றின.
இது தான் பல கோடி ஆண்டுகலைக் கண்டு விட்ட இந்தப் பூமியின் சுருக்கமான வறலாறு.
மாற்றம் என்பதே இந்தப் பூமியில் மாறாத ஒன்றாக என்றும் இருப்பது.
அந்த மாற்றங்களால் வந்ததே இந்த மனித சமூகம்.
கூன் விழுந்த,கொத்துக் கொத்தான முடி கொண்ட எழு எட்டு அடிக்கு குறையாத உயரம் கொண்ட குறைந்த பட்சம் 150 கிலோ எடையுடன் தொடங்கியதுதான் சராசரி மனதனின் உடலமைப்பு.இன்று அவன் சராசரியாக ஐந்தரை அடி உயரம் எண்பது கிலோ நிறை, நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை என்று மாறியிருக்கிறான்.
பல ஆயிரம் ஆண்டுகளாக இந்நிலையில் பெரிய மற்றம் ஏதுமில்லை.
ஆனாலும் காலப்போக்கில் இவன் மேலும், குட்டியாகி சுண்டிச் சுருக்கி வினோதமான முக அமைப்பை எல்லாம் பெற்று ஒரு பெருச்சாளி போல் நிலபரப்பைக் குடைந்து அதனுள் ஊர்ந்து சென்று பதுங்கி வாழும் காலம் வரலாம் என்பதெல்லாம் விஞ்ஞான அனு மானங்கள்.
இந்தப் பூமியில் கிடைக்கும் பல விதமான ஆதாரங்களும், மனித மனத்தின் ஊகம் செய்து பார்க்கும் சக்தியுமே!.
இதன் நடுவே மிக மாறுபட்ட கருத்துகளுடன், நமக்கிருக்கும் அறிவாற்றலால் நம்பமுடியவில்லை என்று ஒரு வார்த்தையில் கூறும் விதமாய் இருப்பதே மத புராணங்கள்.
இதில் புராணவழி அறியப்பட்ட சிவமானது தனித்து நிற்கிறது.
புராணம்,, விஞ்ஞானம் இரண்டையும் கடந்து மூன்றாவதாய் ஒன்றும் உள்ளது.
அது தான் நான்..

மானுடமே முடிந்தால் என்னைப் புறிந்துகொள் என்பது போல் இருக்கிறது அது என்கிறார் டாக்டர் விளாதிமீர்.

இந்தப் பூவுலகில் சிவம் தொடர்பான அடையாளக் குறியீடுகள் பாரத மண்ணில் மட்டுமின்றி ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் கூட இருக்கிறது என்பது டாக்டர் விளாதிமீரின் கருத்து.

அமெரிக்காவில் கிராண்ட் கன்யான் என்னும் வித்தியாசமான மலைப் பகுதியில் பராசக்தியின் அம்சங்கள் என்று வர்ணிக்கப்படும் சிவன், விஷ்ணு, பிரம்மன் மூன்றின் அடையாள உருவங்கள் காணப்படு கின்றனவாம்.

ஆயினும் இந்த மண்ணில் மட்டும் சிவம் தொடர்பான சிந்தனைகளும் சைவம் என்கிற ஒரு பிரிவும் உருவாக ஆழமான ஒரு காரணம் இருப்பதாக விளாதிமீர் கருதுகிறார்.

உலகின் உயர்ந்த சிகரமான இமயம் பூகோள ரீதியில் பூமியின் மையத்தில் (கிட்டத்தட்ட) காணப்படுகிறது.

அதன்படி பார்த்தால் இந்த உலகே கூட சிங்லிங்க சொரூபம் எனலாம்.

ஒரு வட்டத்தில் இருந்து கூம்பு முளைத்தது போல் உலகமே ஆவுடையராகத் திகழ இமயம் சிவஸ்தம்பமாக எழும்பி நிற்கிறது.

அங்கே பஞ்ச பூத ஆராதனையாக குளிர்ந்த காற்றும் உறைந்த பணியே நீராகவும் அதன் மற்றிய குணமே நெருப்பாகவும் இருக்கிறது.

ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட வெளி வேறு எங்கும் காணப்படாத விதத்தில் தூயதாக எல்லாவித் கதிர் வீச்சுகளையும் காணப்படாதாகத் திகழ்கிறது.

இங்கே உயிராகிய ஜீவன் மிகச் சுலபமாக சிவத்தை அடைந்து விட(அ) உணர்ந்து விட ஏதுவாகிறது.

அதனாலயே இங்கே ஞானியர் கூட்டம் அதிகம் இருக்கிறது என்பதும் அவரது கருத்து.!

இந்த ரஷ்ய விஞ்ஞானி சொன்ன விஷயங்கள் எதுவும் எந்த விஞ்ஞானியும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

